தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பண்ணை இயந்திர திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் டிராக்டர் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் M/s SAME DEUTZ – FAHR INDIA, ராணிப்பேட்டை தனியார் தொழிற்சாலையும் இணைந்து பண்ணை இயந்திர திறன் மேம்பாட்டு பயிற்சியளிப்பதற்காக வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி அவர்களின் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பயிற்சியில் கிராமப்புற இளைஞர்களுக்கும், இயந்திர வாடிக்கையாளர்களுக்கும், பண்ணை இயந்திரங்களை அன்றாடம் பயன்படுத்துபவர்களுக்கும், பண்ணை இயந்திரங்களை திறம்படக் கையாளுவதில் பயிற்சியளிக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் M/s SAME DEUTZ - FAHR இந்தியா, ராணிப்பேட்டை தனியார் தொழிற்சாலையின் திறன் வாய்ந்த அலுவலர்களால் இப்பயிற்சி அளிக்கப்படும் என்று கூறினார். தற்பொழுது, கிராமப்புறங்களில் பண்ணை இயந்திரங்களை பழுது பார்க்கவும், பராமரிக்கவும் விவசாயிகள் மிகவும் சிரமப்படுவதால் இப்பயிற்சியில் பயன்பெறும் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயதொழில் துவங்க ஒரு அரிய வாய்ப்பாக அமையும் எனவும் வேளாண் பொறியியல் கல்லூரியின் விஞ்ஞானிகள் மற்றும் மாணாக்கர்களுக்கு நேரடி அனுபவம் பெறுவதில் சிறந்த வாய்ப்பாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்